காதல் மணம்

271

REGISTRAR OF BOOKS
MADRAS
1951

உரிமையாளர்.

இளமுருகு பொற்செல்வி.

காதலர் பண்ணை

காதல் மணம்.

OF THE REGISTRAR OF BOOKS
7 AUG 1951
MADRAS

ஆசிரியர்:

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

பெரியகுளம், மதுரைமாவட்டம்.

முதற் பதிப்பு. 1951.

விலை. 0—6—0

உரிமை பதிவு.

கருத்துரை.

ஒரு பத்திரிகை ஆசிரியர், காந்திய வாதி. ஒரு பள்ளி ஆசிரியை, சுயமரியாதைக் கட்சி. இருவரும் காதலித்துக் கலப்பு மணம் புரிந்து கொண்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! பெரியகுளத்தைச் சேர்ந்த 'தமிழ் சுடர்' பத்திரிகாசிரியர், மீ. சு. இளமுருகனர் துறையூரைச் சேர்ந்த பள்ளி ஆசிரியையான பொருட்செல்வியைக் கலப்பு மணம் புரிந்துள்ள ருசிகரமான வரலாற்றைத் தம்பதிகள் இருவருமே சொல்லுகிறார்கள்.

அரு. இராமநாதன்,
ஆசிரியர் 'காதல்'
திருச்சி.

அவர்களைப்பற்றி.

தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி எழுத்திலே ஆசிரியர் திரு. இராமநாதன் அவர்கட்குத் தனிப் பிரியம்.. "காதல் ஆண்டு மலருக்குக் கட்டுரை வரைக அதுவும் உங்கள் வாழ்க்கை ஒப்பந்த சம்பவத்தைப் பின்னிக் காட்டுங்கள் என்று எழுதினார்கள்". அவர்களால் அன்பு ஆணையை மீறமுடியவில்லை. எழுதினார்கள். இக்கருத்தரையைக் காதலில் கண்ட மலர் அறிமுகம் ஆனவர்கள், ஆகாதவர்கள் எல்லாருமே பாராட்டினர். காதல் காரியாலயத்திற்கு வந்த கடிதங்கள், இவர்கள் முகவரிஇட்டு இவர்களுக்கே வந்த கடிதங்கள் எங்களை ஊக்குவித்தன. அவர்கள் செய்துகொண்ட கலப்புமணச் செயலைவிட கட்டுரை பலரை வசிகரித்ததையும், அவ்வழியில் நடக்கத் தூண்டியுள்ளதையும் கடிதங்கள் மூலமாக அறிந்த நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்

"காதல்" ஆண்டுமலர் பலருக்குக் கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான பிரதிகளை சிரமம் பாராது அச்சிட்டுதவினர் ஆசிரியர். ஆயினும் பற்றுக்குறை. பலர் எங்களிடமே கூறியுள்ளனர் "எப்படியாவது ஒரு மலர் வேண்டும்" என்று.

ஆகவே, 'எங்கள் காதல் மணம்" என்ற கட்டுரையை மட்டுமாவது இன்னும் பலருக்குக் கிடைக்கச் செய்யலாமென்ற கருத்து. அதற்கு 'காதல்' ஆசிரியர் திரு. இராமநாதன் அவர்கள் இசைவு கொடுத்ததுடன் — பிளாக்குகளையும் கொடுத்து உதவினர்கள் நன்றி.

இக்கட்டுரை மூலம் உண்மை வாழ்ந்து உயர்வடைய வேண்டுமென்பதையே எங்கள் ஊதியமாகக் கருதுகிறோம்.

வெல்க சமத்துவம்.

காதலர் பண்ணையார்.

காதல் மணம்.

இளமுருகனார்!

சின்னஞ்சிறுவயதில் எனக்குப் பிள்ளையார் மீது அதிகப் பக்தி. ஆனால் அவருடைய வாகனமான பெருச்சாளியைக் கண்டால்தான் அதிகப் பயம்!

நான் பள்ளிக்கூடத்தில் விளையாடத் துவங்கும் போதே எப்படியோ எனக்குப் 'பிள்ளையார் பித்து' நன்றாகப் பிடித்துவிட்டது. உண்ணும் போதும், உறங்கும்போதுங் கூட என் கையில் சதா 'பிள்ளையார் பொம்மையைப்' பார்க்கலாம். பிள்ளையார் படத்துக்கு, கணக்கு நோட்டைக் கிழித்துப் பூஜை செய்வது. மணலால் கோயில் கட்டுவது. இவைதான் எனது பள்ளிப்பருவ விளையாட்டுகள். உயர் நிலைப்பள்ளியில் வகுப்பு மாறும்போது மாணவர்கள் ஆசிரியர்கட்கு அளிக்கும் தேனீர் விருந்துகளில்கூட, பாவம், அந்த வாத்தியார்களுக்குப் பிள்ளையார் படங்களைத்தான் ஞாபகார்த்தப் பரிசாகக் கொடுப்பேன்.

ஆனால், இன்று? உலகப் பள்ளிக்கூடத்தில் அறிவு பெற்றபின், எனது பழைய மூட பக்தியை நினைத்தால் சிரிப்பு வருகிறது.

பரீட்சையில் 'பாஸா' வதற்காக, நன்மையான காரியம் விளைவதற்காக, கடவுளுக்கு ஆராதனை அபிஷேகம் செய்கிறோம். நம் பக்கம் அநுகூல காரியம் உண்டாவதற்காக மேல் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுக்கிறோம். முன்னதற்குப் பெயர் காணிக்கை. பின்னதற்குப் பெயர் லஞ்சம். ஆனால் இரண்டின் தரமும் மட்ட ரகந்தான்!

உள்ளத்தைக் கடந்த கடவுளுக்கு உருவம் ஒன்று கொடுத்து, பணக்காணிக்கை ரூபமாக அவரை வழிபடுவது எனக்கு இப்போது பிடிப்பதில்லை. சத்தியத்தைத்தான் கடவுளாக மதிக்கிறேன். அதனால் காந்தி மகானையே எனது வழிபாடுக்குரியவராகக் கருதிவிட்டேன்!

பள்ளியில் பயிலும்போதும், நான் படிப்பில் கெட்டிக்காரன். மாணவர்களிடையேயும் செல்வாக்கு உண்டு. ஆனால் ஆசிரியர்களின் அகராதிப்படி, நான் போக்கிரியாகவே இருந்து வந்தேன்.

என்னையே அடித்து விட்டாரே, இந்தப் பொல்லாத வாத்தியார்! என்ற பட்டத்தைச் சம்பாதிக்கத் திட்டமிட்ட ஒரு உபாத்தியாயர், அநாவசியமாக என் கையில் பிரம்பால் அடிக்க வந்தார். நான் பிரம்பைப் பிடுங்கிக்கொண்டு வகுப்பைவிட்டு வெளியே ஓடிவிட்டேன். அந்தத் தன்மான உணர்வுக்காக என் மூத்த தமையனாரிடமிருந்து 'ஒருகுடை' பரிசு பெற்றேன்! அன்று முதல் நியாயத்திற்காக, நேர்மையான உரிமைக்காக எந்த அடக்குமுறையையும் எதிர்க்கும் துணிச்சலும், ஏற்றத் தாழ்வை உடைப்பதற்கு வரம்பை மீறும் புரட்சி மனப்பான்மையும் என் உள்ளத்தில் நன்றாக வேரூன்றி விட்டது.



பள்ளிப் பருவ நாட்களிலேயே பிரசங்கங்கள், சங்கங்கள், பொதுத் தொண்டுகளில் கலந்து கொள்வதில் எனக்கு உற்சாகம் அதிகம் உண்டு. பேரறிஞர்களின் தொடர்பும், மக்கள் சமுதாயத்தை உணரும் சக்தியும் படிப்படியாக வளர்ந்து வந்தது. இப்படியாகப் பொது வாழ்வில் ஈடுபட்டேன். காந்திய வாதியானேன் ....

★

சிறு வயது முதலே எனக்குத் தமிழ் உணர்ச்சி அதிகம் உண்டு. நான் நடத்திய தமிழ்க் கூட்டங்கள் பல. நான் நிறுவிய 'மணிவாசக மன்றமும்' நன்கு வளர்ந்தது. அத்துடன் நானும் வளர்ந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைச்சாலையில் நடந்த 'முதலாவது தமிழிசை மாநாட்டில் எனது மாமாவான பேராசிரியர் 'கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M. L. அவர்களது அழைப்பின் பேரில் கலந்துகொண்டேன். அந்த அறிஞரின் அறிவுரை, தன் மானமும் தமிழ் உணர்ச்சியும் நிறைந்த தமிழ் மகனாய் என்னைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தது!

நான் தீவிர காந்தியவாதி என்பதை முன்பே சொன்னேன். முதல் காங்கிரஸ் மந்திரி சபை நடந்த காலத்தில் 'இந்தியைப் பலவந்தமாகத் திணிக்கும் பிரச்னை அடிபட்டுக்கொண்டிருந்த சமயத்தில், நான் காந்தியவாதியாக இருந்துகொண்டே 'தமிழ் வாழ்க!' எனக்குரல் கொடுத்தேன்,

நாம் வளர, நம் தாய்நாடு வளர, நம் தாய்மொழி தமிழ்மொழி வாழவேண்டுமென்று கூறுவது தவறா? ஆனால் அந்தக் காலத்தில் சிலர் என்னை உண்மையான காந்தியவாதியா என்று சந்தேகித்தார்கள். ஆனால் நான் உண்மையிலே



காந்தி அடிகளை நம்பு பவன், வாய்ச்சொல் வீர னல்ல. செயலாற்றிக் காட்டவேண்டுமென்று. ஹரிஜனத் தொண்டில் ஈடுபட்டேன். அடிக்கடி சேரிகளுக்குச் சென்று இரவு நேரங்களில் ஹரிஜன மாணவர்களுக் குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன்.

இந்த நிலையில் என் மணப்பருவம் வந்தது....

நான் வாழும் நாட்டின் நிலையை உற்றுப்பார்த்தேன். வகுப்புணர்ச்சியால், நாடு நலிவுற்றுக் கொண்டிருக்கிறது. வகுப்பு வாதம். கூடாது குறுகிய மனப்பான்மை கூடாது என்று வெறும் பிரசங்கங்கள் செய்துகொண்டிருப்பதில் பயனில்லை. வகுப்புகள் இருக்கும்வரை வகுப்பு வாதமும் இருந்தேதான் தீரும்! வகுப்புகளை அடியோடு ஒழித்தாக வேண்டும். நாம் உயரவேண்டுமாயின், மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால், சாதிகள் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். அதற்குக் கலப்பு மணம் ஒரு சாதனம்! இதனால் தான் காந்தி மகானும், குறுகிய சாதிச் சுவர்களைத் தகர்க்கக் கலப்பு மணம் செய்துகொள்ளுங்கள் என்று வற்புறுத்துகிறார். அதே நோக்கத்தோடு என் நண்பர்கள் பலருக்குக்



கலப்பு மணம் செய்வித்த, பல கலப்பு மணப் பாராட்டு விழாக்களுக்கும தலைமை வகித்தேன். ஊருக்கு உபதேச மாக இருந்து விடாமல் சொந்த விஷயத்திலும் மணம் புரிந் தால் கலப்பு மணமே புரிவது என்று முடிவு செய்து விட்டேன்.

சொத்திற்காக ஆசைப்பட்டு, பெற்றோர்கள் முன் பின் தெரியாத ஒரு ஆணையும் பெண்ணையும் தாலிக் கயிற்றால் பிணைத்து வைப்பதால், பல தம்பதிகள் மனம் பொருந்தாமல் தவிப்பதைக் கண்டேன். மண வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணும் வாழவா? அல்லது பொருளாதாரப் பெருக்குக் குரிய வியாபாரத் துறையா? நான் சொத்துக்காக எந்தப் பெண்ணையும் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது என்று முடிவுசெய்து விட்டேன்.

"சீர் வரிசைகள் செய்யவில்லை. பெண்களுக்குப் போய் அழைக்கவில்லை "தீபாவளிக்குத் தீஞ்சுவை பொருள்கள் படைக்கவில்லை." என்ற காரணங்களைக் காட்டித் தம்பதிகளைச் சின்னாபின்னப் படுத்தும் முறைகளைக் கண்டேன்! என் மண வாழ்க்கையில் எந்தச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நடக்க விடக்கூடாது என்று முடிவு செய்துவிட்டேன்.

இன்னும் சில பெரிய இடங்களில் தாலிக்கயிற்றில் போடும் எண்ணிக்கை முடிச்சுகளில் உள்ள உயர்வு தாழ்வுகளினால் காதலர்கள் பிரிக்கப்படுவதைக்கண்டேன். மனிதர்களிடந்தான் எத்தனையோ சாதிகள் உண்டு! தாலிகளிலும் எத்தனை சாதிகள்? தொங்குதாலி; சுத்துருதாலி; சிறுதாலி; பெருதாலி; விளக்கடி தாலி........ அந்த தாலிக்கயிற்றில் போடும் முடுச்சுகளில்தான் எத்தனை பிரிவுகள்? ஏழு நூல் இழை; பதினொரு நூல் இழை என்று எத்தனை சாதிகள்? ஆஹா அற்புத கலாசாரத் திருநாடே...

ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் வீட்டில் இந்த தாலித் தினுசுகள் வேறுபாடு அல்லது நூல் இழை வித்தியாசங்களின் காரணமாகப் பெண் எடுப்பது கொடுப்பது கிடையாது. தெரியாமல் மணம் நடந்து விட்டாலும், பின்பு தம்பதிகள் பிரிக்கப்பட்டு 'வாழாவெட்டிகளாகு' வார்கள்! இந்தத் தாலிச் சாதிகளையும், தாலி நூல் கோர்க்கும் நூல் பிரிவுகளையும் கண்டு மனம் பொருமினேன். என் திருமணத்தில் தாலியே கட்டக்கூடாது என்று முடிவு செய்துவிட்டேன்!

சாதி உயர்வுள்ள எங்கள் வீட்டில் சம்பந்தம் செய்துகொள்ள ஆசைப்பட்டு பல பணக்காரர்கள் எனக்கு நிறையப் பணத்தோடு பெண் தருவதாக என் வீட்டாரை நச்சரித்துக் கொண்டிருந்தனர். என்னால் பொறுக்க முடிய வில்லை. "எனது திருமணத்தில் உதவாக்கரை வைதீகம் உதவாது; பெண்களுக்குத் தாலிகட்டும் வழக்கத்தையும் கடைப் பிடிக்கமாட்டேன்" என்ற என் அணுகுண்டுகளை வாரி வீசினேன். அதற்குப்பின் அவர்கள் ஏன் என்னை நச் சரிக்கிறார்கள்? என்னை அண்டவே பயந்தார்கள்! ஆனால் எனது வாழ்க்கை செம்மையாகவும், சீராகவும் செல்ல ஒரு துணைவி தேவை என்பதையும் உணர்ந்தேன் அவள் எப்படி யிருக்கவேண்டுமென்று கற்பனை செய்தும் வந்தேன். சீர் திருத்தக்காரியாக, தமிழ் பண்வு நிறைந்தவளாக வீட்டுக்கு என்னைத் தேடிவரும் ஆண்பிள்ளைகளைக் கண்டால அடுப்படி யில் ஓடி ஒளியாதவளாய் பசு மாடுகளுக்கு மூக்குக் கயிறு கட்டுவதுபோல் தன் கழுத்தில் தாலி கயிற்றால் கட்டிக் கொள்ளவிரும்பாதவளாய், தங்க நகைகளிலே பட்டாடை களிலே தன் மண வாழ்க்கை ஒளிந்து கொண்டிருக்கிறது என்ற அசட்டுத்தனம் இல்லாவதளாய், எல்லாவற்றிற்கும் மேலாய் வேறு சாதியினளாக இருக்கவேண்டும் ..!

இந்த என் "வாழ்க்கைத் துணைவி" கனவை நன வாக்கும் வாய்ப்பை நான் ஆசிரியராயிருந்த "தமிழ்ச்சுடர்," பத்திரிகை தந்தது.

1947-ல் நான் "தமிழ்ச் சுடர்" பத்திரிக்கையின் ஆசிரியரானேன். பெரியகுளத்தில் இருந்து புறப்பட்ட சுடர், தமிழ்நாடு முழுதும், கடல் கடந்தும், தமிழர் உள்ள இடமெல்லாம் ஒளி வீசிற்று. என் பெயரும் ஓரளவு தமிழகத்தில் பரவிற்று.

அப்போது 9—1—47ல் தொட்டியத்திலிருந்து, உபாத்தியாயனி தொண்டு புரிந்துவந்த திருமதி பொருட் செல்வி என்ற பெண்மணி என் 'தமிழ்ச் சுடர்' பத்திரிகைக்குச் சந்தாதாரராகி, பத்திரிகை அனுப்பும்படி கடிதம் எழுதினார். அவருடைய கடிதத்தில் பொங்கிய தமிழ் உணர்ச்சியைக்கண்டு என் உள்ளத்தில் ஆவல் பொங்கியது! உடனே அந்தப் பெண்மணிக்கு என் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்பும்படி எழுதினேன். திருமதி பொருட்செல்வியும் உடனே கட்டுரை எழுதியனுப்பினார். அந்தக் கட்டுரையில் அவரது பெண்மை மிகுந்த தமிழார்வமும் தமிழுக்காக எதையும் தியாகம் செய்யும் உள்ளமும் தெரிந்தது. அந்தக் கட்டுரையைப் படித்த பின் பொருட் செல்வியின் எண்ணமே என் உள்ளம் முழுதும் நிறைந் திருந்தது.

பொருட்செல்வியைப்பற்றி நல்லகருத்துகளும் தோழர்கள் மூலம் எனக்கு எட்டியது. திருமதி பொருட்செல்வி சுயமரியாதை இயக்கப் பற்றுடையவர். எனவே எனது புரட்சிகரமான மணத்திற்கு ஏற்றவர் என்பதையும புரிந்து கொண்டேன். பிறகு? என் மனம் துணைவியைவிரும்பியது போல் துணைவியின் மனம் துணைவனை விரும்புகிறதா என்று அறியவேண்டுமல்லவா? அதற்குவாய்ப்புத் தேவையாக இருந்தது.......... வாய்ப்பும் கிடைத்தது.

ஆரம்ப ஆசிரியர் ஆசிரியைகளின் ஊதியம் போதாது என்ற போராட்டத்தில் முசிறி தாலுகா சங்கத்தின் துணைத் தலைவியாக அமர்ந்து, பொருட்செல்வி ஆற்றலுடன் பணி புரிவதைக் கேள்விப்பட்டு மனம் களிப்படைந்தேன். இதை விட வேறு என்ன சந்தர்ப்பம் வேண்டும்? "பத்திரிகை ஆசிரியர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பற்றிக் கவனிப் பதில்லை." என்ற குற்றச்சாட்டு தவறு என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி நான் பேசிய பிரசங்கங்கள், அறிக்கைகளையெல்லாம் பொருட்செல்விக்கு அனுப்பி, அடுத்துவரும் எனது 'தமிழ்ச் சுட'ரில் ஒரு தலையங்கம் எழுதப்போவதாகவும் எழுதினேன். பொருட்செல்வி மனம் பூரித்துப்போய் இருக்கவேண்டும்!

பிறகு எங்கள் உள்ளப் போக்குகளைப் பறிமாறிக் கொள்ளும் பலவிதக் கடிதப் போக்குவரவுகள் நடந்தன. அவற்றில் சில கடிதங்களின் சுருக்கங்களைக் கீழே தருகிறேன்:

திருமதி பொருட் செல்விக்கு,

இத்தகைய ஆற்றலுடைய தாங்கள் துணைவனுடன் நின்று பணி புரிந்தால் தமிழ்நாடு தலைநிமிரும், சமுதாயம் உயர்வடையும்.

இளமுருகு.

எனது கருத்து சீர்திருத்தந்தான்! கலப்பு மணமே செய்ய எண்ணம் அத்தகைய பண்புடைய துணைவர் கிடைத்தால்தான் என் திருமணம் நடைபெறும்.

பொருட்செல்வி.

தங்கள் கருத்துப்படி ஒரு மணமகன் இருக்கிறன். எனது நண்பன். சீர்திருத்தவாதி. செல்வமில்லாதவர். உழைத்து உண்பவர். தாங்கள் விரும்பினல் அவரை உங்கள் மணமகனுக்கத் தயார்! பத்திரிகை யாசிரியர் என்ற முறையில் இந்தக் கலப்பு மணத்தை முடிப்பதில் எனக்கு அதிக உற்சாகம்.

இளமுருகு

தாங்கள் குறிப்பிட்ட குணங்கள் அவரிடம் இருந்தால் எனக்குச் சம்மதம். ஆனல் எனக்குத் துணைவராக வருபவர் அறிவில் என்னைவிட உயர்ந்தவராக இருப்பது மண வாழ்க்கைக்கு முக்கியம்.

பொருட்செல்வி.

பொருட்செல்வியின் உள்ளப்பாங்கை அறிந்து மகிழ்ந்தேன். பண்பைப் பாராட்டினேன். என் உள்ளத்தை மகிழ்விக்கும் என் வாழ்க்கைத் துணைவி பாக்கிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன். ஆனல் உடன் திருமணத்தைப் பற்றிப் பேசி முடிக்க விரும்பவில்லை. காரணம் கலப்பு மணம்! அதன் காரணமாகச் சார்ந்துள்ள குடும்பத்திலிருந்து எனக்கு ஆதரவு கிடைக்காமல் போகலாம். நாமாகவே வாழத் தக்க வசதியுண்டாக பொருள் வருவாய் என்ற ஊன்றுகோல் உண்டான பின்னரே கலப்பு மணம் புரியவேண்டும் என்று வாளாயிருந்தேன்.

அப்போது அரு. இராமநாதனை ஆசிரியராகக் கொண்டு முற்போக்கு கொள்கைகளுடன் வெளிவரும் "காதல்" பத்திரிகை எனது மனதைக் கவர்ந்தது. எந்த மொழியினும் இல்லாத ஆண் பெண் அகத்துறை இலக்கணம் தமிழ் மொழியில்தான் உண்டு என்று பெருமை பேசுபவர்கள் செய்யாத, ஆனால் செய்ய வேண்டிய இலக்கியப் பணியைச் செய்தது 'காதல்' பத்திரிக்கை அதன் நான்காவது இதழில் பொருட்செல்வி எழுதிய கதை ஒன்று என் பழைய நினைவைத் தீவிரமாக்கியது. குமுதம், திருமாறன் என்ற இருவரைக் காதலர்களாக்கி பொருளாதாரமோ, மதமோ பண்புஒத்த காதலர்களை பாதிக்க வலுவற்றது என்பதை விளக்கி அக்காதலர்கள் உறையூரிலே மணமுடித்துக் கொண்டதாகக் கதையை முடித்திருந்தார்.

அதே சமயம் எனக்குக் 'கலித்தொகை' பாடல் ஒன்றும் நினைவு வந்தது. "பொருள் சேகரிக்கும் வரை திருமணத்தை ஒத்திவைப்பது தவறு! ஒரே ஆடையை காதலர்கள் இருவரும் உடுத்திக்கொள்ளும்படியான வறுமையில் வாடினாலுங்கூட இல்வாழ்க்கையில் ஈடுபடவேண்டும்! இளமை கழிந்து விட்டால் திரும்பி வராது என்பதே அந்தச் சங்க இலக்கியப்பாடல். உடனே பொருளாதாரப் பிரச்னைக்காக மண நாளைக் தள்ளிப்போடாமல், பொருட்செல்வியைக் கலப்பு மணம் புரிந்துகொண்டு விடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

பிறகு எங்கள் உள்ளக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் கடிதப் போக்கு வரவுகள் எனக்கும் பொருட்செல்விக்குமிடையே நடந்தன. அவற்றில் சில கடிதங்களின் சுருக்கம்.

துணைவனுக்கேற்ற துணைவியாக வாழ்வேன். வாழ்க்கைப் படகைக் கவிழ்க்கும் வறுமைப் புயலைப்பற்றிக் கருதாத பண்பு என்னிடமும் உண்டு.

பொருட்செல்வி.

மணக்க விரும்புகிறீர்கள். இதுவரை கட்டுப்பாடு இன்றி இருந்தவள் நான். எனது குணம், நடத்தை, தொழில் இவை தங்களுக்குப் பிடித்ததுதானா? தாய் தந்தையற்ற பெண், சீர் வரிசைகள் இல்லை என்றெல்லாம் உங்கள் உறவினர் எள்ளி நகையாடுவார்களே, அதுபற்றிப் பரவா யில்லையா? மேலும் குடும்பப் பொறுப்பே தெரியாமல் ஓய்வு காலத்தைப் புத்தகப் படிப்பில் செலவிடும் ஒரு பெண்ணை, அநியாயம் செய்பவர்களை எதிர்த்து அதனால் வாயாடி அடங்காப் பிடாரி என்று ஒரு சிலரால் சொல்லப்படும் ஒரு பெண்ணோடு நீங்கள் வாழ்க்கை நடத்த முடியுமா? அறிவுக்குப் பொருத்தமான விஷயங்களில் உங்களுடன் வாதாடுவதை உங்கள் வீட்டவர்கள் தவறாக நினைத்து, எதிர்த்துப் பேசுகிறாளே என்று நினைத்தால் நீங்கள் முகம் சுளிக்காமல் இருப்பீர்களா? திருமணம் ஆனபின் என் ஆசிரியை வேலையைவிட்டுவிட்டால் ஒவ்வொரு பைசாவுக்கும் தங்களை எதிர்பார்ப்பது தன் மானமாகுமா? மணத்திற்குப் பின், புதுமை மாறியபின், உங்களுக்கு என்னை பிடிக்கா விட்டால் என்ன செய்வது? மதுரைக் காரர்களை சொல்ல வேண்டாம். அதுவும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு தன் வாதத் திறமையில் மாறிமாறிப் பேசக்கூடிய சக்தி வாய்ந் தவர்களாயிற்றே பத்திரிகைக் காரர்கள்?

பொருட்செல்வி.

" நீங்கள் படித்த பெண் சீர்வரிசையைப் பற்றி எழுதியுள்ளது வியப்பு. நான் மணம் புரிவது பெண்ணையா, பணத்தையா? வாழ்வின் இன்ப துன்பம் இரண்டையும் ஏற்றுக் களிப்புடன் வாழும் துணைவியைத்தான் விரும்புகிறேன்! திருமணத்திற்குப் பின் நீங்கள் ஏன் ஆசிரியை வேலையை விடவேண்டும்? திருமணத்தில் முக்கியமானது உள்ள உணர்ச்சி, அடுத்ததுதான் உடலுணர்ச்சி. நான் பெண்ணின் உரிமையைப் பறிக்கமாட்டேன். ''ஆணுக்கிங்கே பெண்ணிளைப்பில்லைகாண்'' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் ஆசையுடையவன் நான்.

துணையின்றி ஆணோ பெண்ணோ நீண்ட நாள் வாழ முடியாது. இயற்கையின் ஆற்றல் நிறைந்த நிலைதான் இல்வாழ்வு.

இனியும் தனிமை வாழ்வு நம்மிருவருக்கும் வேண்டாம்.

இளமுருகு;

இளமுருகனாரின் தமயனார், திருநாவுக்கரசர்.

பொருட் செல்வியிடமிருந்து சம்மதம் என்று கடிதம் வந்தது. மனம் பூரித்தது. எனது தமையனார் திரு மீ. சு. திருநாவுக்கரசர் அவர்களும், 'நீ கலப்பு மணம் செய்து கொண்டாலும் உன்னுடன் நான் இருப்பேன்' என்று உற்சாகமூட்டினார்கள். நான் பேரானந்தமடைந்தேன். மண நாளை எதிர்பார்த்தேன்.

பொருட்செல்வி!

இளமுருகனாரை மணக்க முன்பே என் பெண்மையுள்ளம் விரும்பியது. ஆனால் பெண்ணுரிமைப் போராட்டப் பாதையில் செல்லும் என் சிந்தனையுள்ளம் தயங்கியது.

'பெண்ணடிமை தீர்ந்தாலல்லவா மண்ணடிமை தீரும்' என்ற புரட்சிவிளை நிலத்தில் வளர்ந்தவள் நான்.

நான் அரும்பி மொக்காக பூத்துக் குலுங்கியதே சிந்தனைப் பூஞ்சோலையில்தான்! நான் பிறந்தது வளர்ந்ததெல்லாம் நல்ல சுயமரியாதைக் குடும்பம். பழமை நிறைந்த குடும்பமேயானாலும், சீர்திருத்தக் கருத்துகள் வாழ இடமளித்தது எனது தாயின் உள்ளம். என் தாயும் சுயமரியாதைப்பற்று மிகுந்த என் அண்ணாவான சைமன் இராமசாமியாருமே என்னைச் சிந்தனைவாதியாக்கி முற்போக்குப் பாதையில் செலுத்தினார்கள். விளை நிலத்தின் தன்மைதானே பயிருக்கும் இருக்குப?



செங்கற்பட்டு மாவட்ட மகாநாட்டில் பொற்செல்வி
கொடியுயர்த்தி விட்டு அமர்ந்திருக்கிறார்.

என் அண்ணாவின் அழைப்பின்பேரில் பெரிய பெரிய சிந்தனை வர்திகளும் தலைவர்களும் அறிஞர்களும் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். அதனால். எனது அறிவு பட்டை பிடித்த வைரமாயிற்று! இயக்கக் கூட்டங்களுக்கு நானும் அடிக்கடி பேசப்போவேன். இங்கிலேயில் மணத்தின் வழியில் என் மனம் செல்ல மறுத்தது! ஏன்? இந்த ஆண்கள் தான்!

ஆண்களை நினைத்தாலே எனது நெஞ்சம் குமுறுகிறது. ஏனெனில், மேடையில் வானளாவச் சீர்திருத்தம் பேசும் அவர்களது சொந்த வாழ்வில் சீர்திருத்தம் இருக்காது. பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானம் என்று பேசுபவர்கள் எழுதுபவர்களின் வீட்டில், பெண், அடிமையாக, வாயில்லாப் பூச்சியாக, வளர்க்கும் நாய்க்கு இருக்கும். உரிமைகூட இல்லாதவளாக இருப்பதைக் கண்டிருக்கிறேன்.

வீட்டில் எனக்குத் திருமண ஏற்பாடுகள் மும்முரமாகக் கிளம்ப ஆரம்பித்தன. பெரிய செல்வந்தர் ஒருவரை எனக்கு மணமகனாகத் தேர்ந்தெடுத்தனர். எனக்குப் பிடிக்கவில்லை. என் உள்ளமோ நல்ல எழுத்துவன்மையும் சொற்பொழிவுத் திறமையும், பொது வாழ்வுத் தொண்டில் நாட்டமுமுடைய ஒருவரையே நாடியது.

“மண்ணாய்ப்போக!
மண்ணாய்ப்போக!
மனம் பொருந்தா — மணம்
மண்ணாய்ப்போக!”

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதை என் இருதயத்தில் ஒலித்துக்கொண்டே இருந்தது. எனக்குப் பிடிக்

காத செல்வந்தரை மணக்கப் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். அதன் பயனாக என் வீட்டாரின் எதிர்ப்பு, ஏசல், ஏளனம் எல்லாம் பரிசாகக் கிடைத்தன. அதனால் நான் மனந் தளர்ந்துவிடவில்லை.

திருமண மறுப்பிற்குப்பிறகு எனது தாயார் என்னுடன் இருந்து வந்தார்கள். இன்று பெண், இழிநிலையில் வாழ முடியாமல் தவிப்பதற்கு முக்கிய காரணம் அவளுக்குச் சொத்துரிமையும் விவாக உரிமையும் இல்லாததேயாகும்! அந்த உரிமையை அடைந்தேயாகவேண்டும் என்ற மனப்போக்குள்ள நான், பொருளாதாரத் துறையில், வாழ்வதற்கு ஆண்களின் கையை எதிர்பார்க்கக்கூடாது என்ற நினைவாலேயே பள்ளிக்கூடத்தில் ஆசிரியைப் பணியை ஆற்றி வந்தேன். அப்போதும் ஆசிரியைகளாக இருக்கும் மற்றப் பெண்களைப்போல் ரிப்பன், பூ, சினிமா, தலைக்குச் சிலேடு, நகைகள் என்ற வழியில் நான் பணத்தைச் செலவிட்டதே கிடையாது. கிடைத்த நேரத்தைப் பொதுக்கூட்டத்துக்குப் பேசப் போவதும் கொடியேற்றப் போவதிலும், கிடைத்த பணத்தைப் புத்தகங்கள் பத்திரிக்கைகள் வாங்குவதிலுமே செலவிட்டேன்.

இப்படிப் பத்திரிக்கைகள் வாங்கிப் படிக்கும் பழக்கத்தால், 'தமிழ்ச்சுடர்' பத்திரிகைக்குச் சந்தாதாரரானேன். அதன் தமிழார்வச்சுடர், அந்த ஆசிரியர் மீது எனக்கு அளவற்ற மதிப்பை உண்டாக்கியது. பிறகு எங்களிருவருக்கிடையே கடிதப்போக்கு வரவுகள் நிகழ்ந்தது. எங்கள் இருவரது கருத்துக்களும் ஒருமித்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும்!

ஆனால் ஆரம்பத்தில் அந்த ஆசிரியர் மீது எனக்குச் சந்தேகம் தோன்றத்தான் செய்தது. எத்தனையோ எழுத்தாளர்களைப்போல இவரும் எழுத்தளவில் தானே என்று! ஆனால் பின்பு? அவரது பண்பு, என் புதுமைப்பெண் தாகத்திற்குச் சங்கூதி, எனக்கு அவர்மீது அலாதியான மதிப்பை உண்டாக்கி விட்டது.

அவர் எழுதிய கடிதங்களில் உள்ள சில கருத்துகள் என் கருத்துக்கு எதிரானவை. இருப்பினும் மனதிலுள்ளதை சிறிதும் தயக்கமின்றி எழுதப் பின்வாங்கவில்லை. அதனால் அவர்மீது எனக்கு தனி மதிப்பு வளர்ந்தே வந்தது. கலப்பு மணக்கருத்து மலர்ந்து விரிந்தது.

'வழியென்று சாதியென்று
உரைப்பார்கள்
கற்றவளே ஒன்று
சொல்வேன் — உன்
கண்ணைக் கருத்தைக்
கவர்ந்தவன் நாதன்'

என்ற புரட்சிக் கவி பாரதிதாசனின் கவிதை என்னைச் செயலாற்றத் தூண்டியது.

இளமுருகனாரின் தாயார் ஈசுவரவடிவு

இந்த சமயத்தில் அவர் "மகாநாட்டிற்கு இங்கு உங்களை அழைக்கிறேன். வந்து கலந்துகொள்ளுங்கள். தாங்கள் ஒருமுறை இங்கு வந்தால், எனது தாயார் தங்களைப் பார்த்துப் பழகினால் உங்கள் மீது அன்பு உண்டாகும். அதன்மேல் நம் கலப்பு மணத்தை நிறைவேற்ற வசதியாக இருக்கும், என்று கடிதம் எழுதினார். மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை.

தாயின் இசைவு முக்கியமல்லவா? 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனி சிறந்தல்லவா' என்னைப்போல அவரும் தாயன்போடு இருப்பது என் உள்ளத்திற்கு உவகை அளித்தது.

நான் ஒரு 'காதல்' பத்திரிகையில் 'வரப்போகும் கணவர்' என்ற பகுதியில், அறிஞர் பல்ரைக் குறிப்பிட்டு அவர்களின் தன்மைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்த ஒரு துணைவர் எப்படி யிருக்கவேண்டுமென்று எழுதினேன், அதைப் படித்துவிட்டு இளமுருகனார் எனக்கு வரைந்த கடிதம், அவரையே என் வரப்போகும் கணவராக வரித்து விடத் தூண்டியது. 'வேண்டாத சாதியிருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்' விளங்கும்படி புரட்சிக் கவிஞரின் குரல் இளமுருகனாரைக் கலப்பு மணம் புரிய என்னை கூவியழைத்தது.

பிரிவு வேளையில் என் அருமைத்தாய் என்னை அன்புடன் அழைத்து, ''செல்வி கட்டாயம் திருமணம் செய்து கொள்'' என்று என்னிடம் உறுதிமொழி வாங்கிய காட்சி என் கண்முன் வந்து நின்று திருமணத்திற்கு இசைய வைத்தது. பிறகு நான் மனைத்தக்க மாண்புடையவளானேன்.

பொற்செல்வி, இளமுருகு வாழ்க்கை ஒப்பந்த
பாராட்டு விழாக் கூட்டத்தினர்

நாங்கள்!

கருத்துக் கலந்து காதல் வழி கலப்பு மணம் புரிந்துகொண்டோம். வாழ்க்கை ஒப்பந்தமும் முடிந்தது. ஆனால் நண்பர்களோ பாராட்டுக்கூட்டம் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நாங்கள் ஏதாவது ஒரு புதுமையைச் செய்திருந்தால், விஞ்ஞான நுட்பம் கண்டுபிடித்திருந்தால், பாராட்டுக்கூட்டம் அவசியந்தான். பிறப்பு இறப்பைப் போல மனிதனது வாழ்வில் சர்வ சாதாரணமான ஆண் பெண் இணைப்புக்கு எதற்குப் பாராட்டுக்கூட்டம்? ஆனால் தோழர்கள் கேட்கவில்லை. ‘உங்கள் பாராட்டுக்கூட்டத்தால் உங்களது வழியை இன்னும் பலர் ஊக்கமாகப் பின்பற்றுவார்கள்’ என்றார்கள். நாங்கள் ஒப்புக்கொண்டோம்,

எங்களைப்போலக் கருத்து சார்புற்றவரான திரு. அரு. இராமநாதன் பாராட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்

கிஞர். மற்றும் பல பத்திரிகாசிரியர்களும், தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும் அந்தக்கூட்டத்தில் கலந்து எங்களைப் பாராட்டினார்கள்.

தோழர்கள் கூறியபடி எங்கள் கலப்பு மணப் பாராட்டுக் கூட்டத்தால் மற்ருெரு புரட்சி மணம் பெரிய குளத்தில் நிகழ்ந்தது. துணைவியை இழந்த திரு: பழனிச்சாமி முதலியார், பதின்மூன்ரும் வயதிலேயே கணவனை இழந்து படித்து ஆசிரியைப் பதவிக்கு வந்த திருமதி. சுப்புலட்சுமியைக் கலப்பு மணம் செய்துகொண்டார். இது எங்கள் புரட்சி மணத்தின் தொடர்பால் நிகழ்ந்தது என்று அந்தப் பண்புமிக்கத் தம்பதிகள் கூறுவதைக்கேட்கும்போது, நாங்கள் புரட்சிப்போக்கால் பட்ட துன்பங்கள் மாற்றங்கள், எளனங்கள், அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியில் கூத்தாடுகின்ரேம்.

எங்கள் சீர்திருத்தக் கழனியிலே செந்தாமரை மலரத் துவங்கி விட்டது. நாடு, சாதி சாக்கடைகளில் செல்லாமல் ஒரே சமுதாய ராஜபாட்டையில் செல்லும் நம்பிக்கை எங்களுக்கு உண்டாகிவிட்டது. இந்தக் காதல் மணம் நிகழத் தூண்டுகோலாக விளங்கிய 'காதல்' பத்திரிகையை நாங்கள் ஒருநாளும் மறக்கமுடியாது!

வெல்க சமத்துவம்.

ராஜா பிரிண்டிங் ஒர்க்ஸ், இராஜபாளையம்:—51.

உலகில் மனிதனின் அவசியத் தேவை,
ஜீவாதாரமான பொருள்கள் மூன்று.

அவற்றில் இரண்டு
எங்களிடம் உள்ளன

1. அற்புதமான சின்னஞ்சிறு வீடு முதல் வானம் தொடும் மாடி வீடுகளும் கட்டக்கூடிய

"இந்தியா சிமெண்டு"

2. ஆடைகள் தயாரிப்புக்கு நாலும் ஆடைத் தேவையை பூர்த்தி செய்து கொள்ள

"மேட்டூர்மல்" லாங்கிளாத்
பாம்பே மில் துணிகள்

இவற்றிற்கு:—

விக்டரி டெக்ஸ்டைல்ஸ்
விக்டரி டிரேடர்ஸ்

3484/2, மேலராச வீதி, புதுக்கோட்டை,

உரிமையாளர்:— S. மீனாட்சி சுந்தரம் B. A. L. T.

மனித உள்ளம் எதிலும் நிலைபெறவே விரும்பும்!
அந்த நினைவை நிறைவு செய்வது ஓவியம்!
உங்களுக்கு உள்ள மகிழ்வுண்டாகும் வகையில்
போட்ரைட்ஸ், என்லார்ஜ்மெண்ட், டைசைன்ஸ்,
செக்ஸஸ் இவைகளுக்கு

மணி ஆர்ட்ஸ்,
148. மேலமாசிவீதி, **மதுரை.**

சித.கோமதிநாயகம்பிள்ளை
ரெடிமேட் ஜீவலரிமார்ட்
43, நீர், கீழரதவீதி,
திருநெல்வேலிடவுன்.
உத்திரவாதமுள்ள
பவுன், தங்கநகைகள்
வெள்ளிப்பாத்திர
வியாபாரம்.
ஹெட் ஆபீஸ்
கூளக்கடை பஜார்
திருநெல்வேலி டவுன
ஆர்டர்கள் உடனுக்கு
உடன் கவனிக்கப்படும்

OFFICE ... OF BOOKS
9 JUL 1951

வெளிவர இருப்பவை:

1. கடவுளின் பெயரால்
   மீ. சு. திருநாவுக்கரசர்.
2. சாந்தி முகூர்த்தம்
   கவிஞர் முடியரசர்.
3. பண்டிதை பத்மினி
   அருணன்.
4. அழப்பிறந்தவர்கள்
   உமாமணி.
5. அன்பழைப்பு
   அறிஞர் அண்ணா.
6. காதல் மொழிகள்
   முருகையா.
7. பிணம்
   மீ. சு இளமுருகு பொற்செல்வி.

★ காதலர் பண்ணை. ★

பெரியகுளம். ○ மதுரை மாவட்டம்.